# பிரதமரின் விஸ்வகர்மா திட்டம்

பிரதமரின் விஸ்வகர்மா திட்டமானது கிராமப்புற மற்றும் நகர்ப்புற இந்தியாவின் பாரம்பரிய கைவினைஞர்கள் மற்றும் கைவினைத்தொழிலாளர்களை ஆதரிப்பதாகும்.

## நோக்கம்

- கைவினைஞர்கள் மற்றும் கைவினைத்தொழிலாளர்களை விஸ்வகர்மாவாக அங்கீகரித்து திட்டத்தின்கீழ் அனைத்து சலுகைகளையும் பெற தகுதியுடையவர்களாக ஆக்குதல்.
- கைவினைத் தொழிலாளர்கள் தங்கள் கைகள் மற்றும் கருவிகளுடன் பணிபுரியும் பாரம்பரிய திறன்களின் குரு-சிஷ்ய பரம்பரை அல்லது குடும்ப அடிப்படையிலான பயிற்சியை வலுப்படுத்துதல் மற்றும் வளர்த்தல்.
- கைவினைஞர்கள் மற்றும் கைவினைத் தொழிலாளர்களின் தயாரிப்புகள் மற்றும் சேவைகளின் தரத்தை மேம்படுத்துதல்.
- விஸ்வகர்மாக்கள் உள்நாட்டு மற்றும் உலகளாவிய மதிப்புத் தொடர்களுடன் ஒருங்கிணைக்கப்படுவதை உறுதி செய்தல்.
- மேலும் இணையவழி பரிவர்த்தனைகளை ஊக்குவித்து விஸ்வகர்மாக்களின் இணையவழி செயல்பாடுகளை மேம்படுத்துதல்.

## பயன்கள்

- பிரதமரின் விஸ்வகர்மா திட்டத்தில் இணைய விரும்புபவர்கள் பொது சேவை மையத்தின் மூலம் முன்பதிவு செய்ய வேண்டும்.
- வெற்றிகரமான பதிவு மற்றும் சரிபார்ப்புக்குப்பிறகு, பயனாளிகளுக்கு பிரதமரின் விஸ்வகர்மா சான்றிதழ் மற்றும் அடையாள அட்டை வழங்கப்படும்.
- திறன் சரிபார்ப்புக்குப் பிறகு, பயனாளிகளுக்கு தொழில் சார்ந்த கருவிகளை வாங்க இ-வவுச்சர் மூலம் ரூ.15,000/-ற்கான ஊக்கத்தொகை வழங்கப்படும்.
- திட்டத்தில் இணைபவர்களுக்கு ரூ.500/- உதவித்தொகையுடன்கூடிய திறன் மேம்பாட்டு பயிற்சி வழங்கப்படும்.
- கைவினைக் கலைஞர்களுக்கு முதல் தவணையாக ரூ.1 இலட்சம் வரை 5% வட்டியுடன் வங்கிகளின் மூலம் வழங்கப்படும். இதனை தவணைமுறையில் 18 மாதங்களில் திருப்பி செலுத்தவேண்டும்.
- மேம்படுத்தப்பட்ட திறன்பயிற்சி முடித்தவர்களுக்கு, இரண்டாம் தவணையாக ரூ.2 இலட்சம் வரை 5% வட்டியுடன் கடன் வழங்கப்படும். இத்தொகையினை 30 மாதத் தவணையில் திருப்பி செலுத்தவேண்டும்.

பயனாளிகள்

இந்த திட்டம் இந்தியா முழுவதும் உள்ள கிராமப்புற மற்றும் நகர்ப்புற மற்றும் நகர்ப்புறங்களில் உள்ள கைவினைஞர்கள் மற்றும் கைவினைத் தொழிலாளர்களுக்கு ஆதரவை வழங்கும். முதலில் பிரதமரின் விஸ்வகர்மா திட்டத்தின்கீழ் பின்வரும் பதினெட்டு பாரம்பரிய தொழில்கள் இடம்பெறும்.

(i) தச்சர் (சுதார்)
(ii) படகு தயாரிப்பாளர்;
(iii) கவசம் தயாரிப்பவர்;
(iv) கொல்லர் (லோஹர்);
(v) சுத்தியல் மற்றும் கருவிகள் தயாரிப்பவர்;
(vi) பூட்டு தயாரிப்பவர்;
(vii) பொற்கொல்லர் (சோனார்);
(viii) குயவர் (கும்ஹார்);
(9) சிற்பி (மூர்த்திகர், கல் தச்சர்), கல் உடைப்பவர்;
(x) காலணி தைப்பவர்(சார்மர்)/காலணி தொழிலாளி/காலணிக் கைவினைஞர்;
(xi) கொத்தனார் (ராஜமிஸ்திரி);
(xii) கூடை/பாய்/துடைப்பம் தயாரிப்பவர்/கயிறு நெசவாளர்;
(xiii) பொம்மை தயாரிப்பவர் (பாரம்பரியம்);
(xiv) முடி திருத்தும் தொழிலாளர் (நயி);
(xv) பூமாலை தொடுப்பவர் (பூக்காரர்);
(xvi) சலவைத் தொழிலாளி (டோபி);
(xvii) தையல்காரர் (டார்ஸி); மற்றும்
(xviii) மீன்பிடி வலை தயாரிப்பவர்.

பதிவு செய்யும் இடம் :
அருகில் உள்ள அங்கீகரிக்கப்பட்ட பொது பயன்பாட்டு மையம்

மேலும் தேவையான விளக்கங்களை https://pmvishwakarma.gov.in/ எனும் வலைதளத்தில் தெரிந்து கொள்ளவும்


## சந்தேகங்களுக்கு தொடர்பு கொள்க :

பொது மேலாளர்

மாவட்டத் தொழில் மையம்
தட்டாஞ்சாவடி, புதுச்சேரி – 605 009.

தொ.எண் : 0413– 2248391, 2249392